திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, இத்தகைய உதவிகள் மத்திய அரசின் மூலமாக நமக்குக் கிடைக்கின்றனவா அல்லது யுனிசெஃப் மூலமாக நேரடியாகவே மாநில அரசுக்குக் கிடைக்கின்றனவா? இப்போது பி. எல். 480 நிறுவனத்தின் மூலமாக சில பொருள்களை வினியோகம் செய்கின்றார்கள் என்று இருக்கின்றது. அவையும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் மாண்புமிகு தலைவரவர்களே, யுனிசெஃப் ஸ்தாபனத்தின் ஒத்துழைப்பு இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் பரவலாக, மருத்துவ நலத் துறை, நோய்த் தடுப்புத் துறை, குழந்தைகள் நல்வாழ்வு ஆகியவற்றுக்காக மாநிலங்களிலே, சிறப்பாக கிராமப்புற மக்களுக்கு உதவும் வகையில் அமைந்திருக்கின்றது. இந்திய அரசு ஏற்றுக் கொண்ட ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் அல்லது ஒத்துழைப்பைப் பெற்று, அவ்வப்பொழுது, உள்ள நிலைமைகளுக்கு ஏற்ப மருந்துகள், கருவிகள் எல்லாம் வழங்கப்படுகின்றன என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Radio-Diagnostic and Radio-therapy Equipments

* 27 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is a Committee to advise the Health Department towards the purchase of Radio-Diagnostic and Radio-therapy equipments; and

(*b*) if so, the names of the members of the Committee?

நோயறியும் கதிரியக்க (Radio Diagnostic) சாதனம், கதிரியக்க முறையில் சிகிச்சையளிக்க உதவும் (Radio Therapy Equipments) சாதனங்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நோயறியும் கதிரியக்க (Radio Diagnostic) சாதனம், கதிரியக்க முறையில் சிகிச்சையளிக்க உதவும் (Radio Therapy Equipments) சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக சுகாதாரத்துறைக்கு ஆலோசனை கூறுவதற்குக் குழுவொன்று உள்ளதா?

(இ) ஆமெனில், அக்குழுவின் உறுப்பினர்கள் யார்—யார்?

1974 சனவரி 22]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) மேலவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

THIRU G. SWAMINATHAN : Sir, I find, in this Committee the Director of Medical Education is a member, the Director of Bernard Institute is another member and there are two other members also. Some of these members are very junior to many Radiologists working elsewhere. Will the Hon. Minister consider having senior persons on this Committee, because equipments worth many lakhs of rupees are being purchased by the Department? Some time ago wrong purchases have also been made. I want to know whether the Government will consider having senior Radiologists on the Committee, so that a decision will not be taken by one person without the opinion of other competent persons.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, if the hon. Member wants that the decision should not be taken by a single man but by a Committee, it is natural that the suggestion will be accepted. Even in the Committee, though the members may seem to be somewhat junior, they are holding independent positions in different institutions having their own opinion. The Committee will adopt the democratic method.

THIRU G. SWAMINATHAN : Sir, the senior members on the Committee are the Director of Medical Education and the Director of Bernard Institute. The Director of Medical Education is not a qualified person regarding the purchase of such equipments. The only person qualified and who is senior is the Director of Bernard Institute. But he is also not a Specialist in Therapy. So, may I request the Hon. Minister to appoint a fully qualified person in Radio-Therapy as a member for purchasing these equipments? The Hon. Minister may be aware that some months back when Cobalt was available, Deep X-ray equipments were purchased and some mistake has occurred. Equipments worth lakhs of rupees are being purchased by this Committee.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the seniority or the juniority of the members does not count at all. Even the junior man is giving his own opinion independently of the others. His opinion is not discounted merely because he is junior. I cannot also definitely say that they are certainly juniors to those

---

@ 91–92 ஆம் பக்கங்களில் இணைப்புII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

whom the hon. Member has referred to. They are representing different institutions in the City. Because the Committee may have to meet very often, persons from outside Madras City are not included in the Committee for the convenient functioning of the Committee.

Distribution of Baby Food

* 28 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether it is a fact that the State Government have sought the permission of the Central Government for taking over the distribution of baby food;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the stage at which the matter now stands?

குழந்தைகள் உணவுப்பொருள் விநியோகம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குழந்தைகள் உணவுப்பொருள் விநியோகத்தை மேற்கொள்ள மாநில அரசு மத்திய அரசின் அனுமதியைக் கோரியுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது?

(உ) தற்போது இந்த விஷயம் எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) இம்மாநிலத்திலுள்ள நியாய விலைக்கடைகள் மூலம் குழந்தைகள் உணவைப் பங்கிட்டளிக்கும் பொருட்டு, தயாரிப்பாளர்களிடமிருந்து குழந்தைகள் உணவைத் தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்திற்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இந்த அரசு, இந்திய அரசிடம் கேட்டுள்ளது.

(உ) இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, என்ன காரணத்திற்காக இந்த மாதிரி மத்திய அரசினை நமது மாநில அரசு கேட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.